தொல்காப்பிய மன்றம் – கனடா

Association for Tolkappiyam - Canada

தொல்காப்பிய வழி, தொன்மைத் தமிழர் வரலாறும் பண்பாடும் அறிவோம்

முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024

**பேச்சுப் போட்டி: வகுப்பு - 06 (2012-இல் பிறந்தோர்)**

# செம்மொழியான தமிழ் மொழிக்கு வித்திட்டவர் தொல்காப்பியர்

தமிழ் மொழியில் இன்று கிடைக்கும் நூல்களுள் முதல் நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தில் செம்மொழிப் பண்புகள் காணப்படுகின்றனவா என்பதே இத் தலைப்பின் மையக் கருவாகும். முதலில், செம்மொழியாக அடையாளம் காண்பதற்கான தகைமைகள் எவை எனக் காண்போம்.

உலக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட செம்மொழிக்கான பண்புகளாவன,

1. தொன்மையானதாக இருக்கவேண்டும்,
2. மனித இனத்திற்குச் செறிவூட்டும், அரிய பண்புகள் அடங்கிய, தனித்துவமான இலக்கிய மரபுபைக் கொண்டிருக்கவேண்டும்.
3. **வேறு எம் மொழியில் இருந்தும் கடத்தப்பட்டதாக**, அதாவது கடன் வாங்கியதாக இருக்கக்கூடாது,
4. **தற்கால இலக்கியங்களிலிருந்து வேறுபட்ட** பழமை வாய்ந்ததாக இருக்கவேண்டும்.

செம்மொழியான தமிழ்மொழி 3000 ஆண்டுகள் பழமையானது. இன்று உலகில் பேசப்படுகின்ற ஆயிரக்கணக்கான மொழிகளுள் "**வாழும் மூத்த மொழி**" தமிழாகும். தமிழ் மொழி எமது **அடையாளம்**, அது எமது **முகவரியாகும்**.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்" - என்றும்,

"சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே" - என்றும்

கூறியவர் பன்மொழிப் புலவரான **மகாகவி பாரதியார்.**

**அடுத்து, ஆதித் தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் , செம்மொழிப் பண்புகளைக் கொண்டுள்ளதா என காண்போம்.**

தமிழ்மொழி வளர்ந்து, இலக்கியம் கண்டு, அவ்விலக்கியங்களுக்கு இலக்கணம் கண்ட நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் காலம் பொது ஆண்டுக்கு முன் 711 ஆம் ஆண்டு என்பது ஆய்வாளர் முடிபாகும். இதன் அடிப்படையில், **தமிழ் மொழி முதிர்ச்சி பெற்ற நிலையில் எழுந்த பழமையான நூல் தொல்காப்பியம்.**

**தொல்காப்பியர் பொருளதிகாரத்தில், பண்டைய மக்கள் வாழ்வியலை அகம், புறம் என்னும் கோட்பாடுகளாக வகுத்துள்ளார்.** மக்கள் வாழ்வியலை இலக்கியமாகப் படைப்பதற்கு இலக்கணம் வகுத்தவர்.

**அகம், புறம் என்னும் கோட்பாடுகள் உலகிலேயே தனித்தன்மையும் சிறப்பும் வாய்ந்தவை**. உலகில் வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்த ஒரே இலக்கணம் தொல்காப்பியமே. **தொல்காப்பியம் பொருளதிகாரம் தனித்துவமான, தமிழ் மண்ணுக்கே உரிய இலக்கிய மரபைக் கூறுகிறது.**

தமிழர் பண்பாடு, நாகரிகம், அறிவியல் திறன் முதலியவற்றை **உலகம் அறிய வழி வகுத்த முதல் நூல் தொல்காப்பியம்.** பண்டைய இந்திய இலக்கியங்களில் **பொது மக்கள் பற்றி அதிகம் பாடியிருப்பது தமிழிலேயே** என்று அறியப்படுகிறது. **தொல்காப்பியத்தில் கூறப்பட்ட தகவல்கள் வேறு எந்த மொழியில் இருந்தும் கடத்தப்பட்டவை அல்ல.**

தொல்காப்பியம் கூறும் இலக்கிய வடிவங்கள், பாடுபொருள், உத்திகள் யாவுமே இக்கால இலக்கியத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டவை.

ஒரு சூழலில் அடிப்படையான முன்னுதாரணமாகவோ அல்லது உச்சக்கட்ட சாதனையாகவோ கருதப்படும் படைப்பு தான் செவ்வியல் படைப்பு. **இவ்வகையில் தொல்காப்பியம் ஒரு செவ்விலக்கியமே.**

**இன்று எமக்குக் கிடைக்கும் தமிழ் இலக்கியங்களுள் செவ்விலக்கியப் பண்புகள் நிறைந்த தொல்காப்பியமே முதல் இலக்கியமாகும். இந்த அடிப்படையில் செவ்விலக்கியமான தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பியரே செம்மொழியான தமிழ்மொழிக்கு வித்திட்டவர் என்பதில் ஐயமில்லை** என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி. வணக்கம்.